| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 09.03.2026 | |
| CC No. 126/2023 | |
| சாட்சி :PW1 | |
| பெயர் : திரு. முருகன் | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. அழகப்பன் | தொழில் : கூலி |
| கிராமம் : முத்தாழ்வார்பட்டி | சமயம் : |
| தாலுக்கா : மருங்காபுரி | வயது : 52/2026 |
| ( வழக்கறிஞர் ஆஜர்) | |

---------------------------------------------------------------

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் எனது மகன்கள். கடந்த 2 வருடத்திற்கு முன்பு மாலை 06.00 மணியளவில் எனது வீட்டில் துணிகளில் தீப்பற்றி கொண்டது. அது சம்மந்தமாக மறுநாள் மந்தையம்மாள் கோவில் மந்தையில் உள்ள அரசு மரத்தடியில் நான் பேசிக்கொண்டிருந்த போது சில நபர்கள் கூடி பிரச்சனை நடந்தது. அதில் நான் என்னவென்று பார்க்க சென்ற போது தடுமாறி கீழே விழுந்துவிட்டேன். அதில் எனது இடது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது. அதனால் மணப்பாறை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தேன். அங்கு வந்த போலீசார் எழுதாத வெள்ளை தாளில் கையொப்பம் பெற்றுச்சென்றார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அது அ.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதில் என்ன எழுதியிருந்தது பற்றி எனக்கு தெரியாது.

**சாட்சி அரசு தரப்பு சாட்சி பகுதியாக அரசு தரப்பு சாட்சியத்தை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை என்பதால் அரசு தரப்பில் குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

2. மேற்சொன்ன சம்பவத்தில் ஆஜர் எதிரிகள் என்னை ஆபாசமாக திட்டி

குச்சியால் எனது தலையிலும், காலிலும் அடித்து காயம் ஏற்படுத்தியதாகவும் அதனால் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற போது போலீசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்து எதிரிகள் மகன்கள் என்பதால் அவர்களுடன் சமாதானமாக போய்விட்டதால் அவர்களை காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை.**

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/–R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.